**சுருக்கம்**

பள்ளிக்கல்வி பாடத்திட்டம் – 3, 4, 5 மற்றும் 8–ஆம் வகுப்பு பாடத்திட்டம் மாற்றம் 2019–2020–ஆம் கல்வியாண்டில் நடைமுறைப்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வித் (ERT) துறை**

அரசாணை (நிலை) எண்.44 நாள் 07.03.2019

திருவள்ளுவர் ஆண்டு 2050

மாசி 23

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண். 99, பள்ளிக்கல்வித் துறை, நாள் 22.05.2017.
2. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் கடித ந.க. எண்.604/ஈ2/2017, நாள் 21.02.2019.

-----

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பாடத்திட்டம் மற்றும் பாடப்புத்தகங்களை மாற்றி அமைத்திடவும், அதன்படி 1, 6, 9 மற்றும் 11–ஆம் வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்டத்தினை 2018 – 2019–ஆம் கல்வி ஆண்டிலும், 2, 7, 10 மற்றும் 12–ஆம் வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்டத்தினை 2019–2020–ஆம் கல்வி ஆண்டிலும், 3, 4, 5 மற்றும் 8–ஆம் வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்டத்தை 2020–2021–ஆம் கல்வியாண்டிலும் செயல்படுத்திட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் 2018–2019–ஆம் கல்வியாண்டில் 1, 6, 9 மற்றும் 11–ஆம் வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு புதிய பாடப்புத்தகம் அனைத்து பள்ளிகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது என்றும், இதனைத் தொடர்ந்து 2, 7, 10 மற்றும் 12–ஆம் வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்கள் தயாரிக்கும் பணி 2019–ஆம் வருடம் ஏப்ரல் மாத இறுதியில் முடிவடையும் நிலையில் உள்ளது என்றும், 2020–2021–ஆம் கல்வியாண்டில் நடைமுறைப்படுத்த வேண்டிய 3, 4, 5 மற்றும் 8–ஆம் வகுப்புகளுக்குரிய முதல் பருவத்திற்கான பாடப்புத்தகங்கள் ஏப்ரல் மாத இறுதிக்குள் வழங்க இயலும் என்றும், தற்சமயம் மேற்கண்ட வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு, புத்தக வடிவமைப்பு பணியில் உள்ளது என்றும், இதனைத் தொடர்ந்து முதல் பருவம் முடிந்து ஒரு மாதத்திற்குள் இரண்டாம் பருவ பாடங்களுக்கான குறுந்தகடுகளும் தயாரிக்க இயலும் என்றும், மேலும் 3, 4, 5 மற்றும் 8–ஆம் வகுப்புகளுக்கான சிறுபான்மை பாடங்களின் குறுந்தகட்டினை அடுத்த கல்வியாண்டில் (2020–2021) மூன்று பருவங்களுக்கும் மொத்தமாக வழங்க இயலும் என்றும், எனவே மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2020–2021–ஆம் கல்வியாண்டில் நடைமுறைப்படுத்த வேண்டியதாக தெரிவிக்கப்பட்டுள்ள 3, 4, 5 மற்றும் 8 வகுப்புகளுக்குரிய பாடப்புத்தகங்களை

வரும் 2019–2020–ஆம் கல்வியாண்டிலேயே நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று 3, 4, 5 மற்றும் 8 வகுப்புகளுக்கு பாடத்திட்டம் மாற்றம் செய்து பாடப்புத்தகங்களை 2019–2020–ஆம் கல்வியாண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநருக்கு அனுமதி வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
நகல்
மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
இருப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்